சுருக்கம்

பள்ளிக் கல்வித் துறை– அரசு / நகராட்சி உயர்நிலை /மேல்நிலைப் பள்ளிகளில் முதுகலை பட்டதாரி ஆசிரியர் மற்றும் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் அரசு உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர் கூடுதல் பணியிடங்கள்– ஒப்பளிப்பு – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

பள்ளிக் கல்வி (வ.செ 2 )த் துறை

அரசாணை (நிலை) எண்.212 நாள் 23.12.2011

திருவள்ளுவராண்டு 2042
மார்கழி: 07
படிக்க:

பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித எண்.84545/டபிள்யு 2/2009, நாள், 11.7.2011, 27.7.2011, 2.8.2011 மற்றும் 9.8.2011.

----

ஆணை:–

பள்ளிக் கல்வி இயக்குநர் மேலே படிக்கப்பட்ட தனது கடிதத்தில், அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு 1 : 40 என்ற ஆசிரியர் மாணவர் விகிதாச்சாரப்படி அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் (Rashtriya Madhyamik Shiksha Abhiyan) அனுமதிக்கப்பட்டுள்ள 6752 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களையும், மாநில அரசு நிதியிலிருந்து 120 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களையும் தோற்றுவிக்க அரசின் ஒப்பளிப்பைக் கோரியுள்ளார். மேலும், அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளின் மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு 1 : 40 என்ற ஆசிரியர் மாணவர் விகிதாச்சாரப்படி கூடுதலாக தேவைப்படும் 3187 முதுகலை ஆசிரியர் பணியிடங்களை ஒப்பளிப்பு செய்து உரிய ஆணை வழங்குமாறும் பள்ளிக் கல்வி இயக்குநர் கோரியுள்ளார்.

2. பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:

(i) அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் 2011–2012 ஆண்டு செயல் திட்டத்தின்கீழ் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6752 பட்டதாரி ஆசிரியர் கூடுதல் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

(ii) அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தில் சேர்த்து மைய அரசின் ஒப்புதல் பெறுவதை எதிர்நோக்கி மேற்சொன்ன பள்ளிகளுக்கு கூடுதலாக தேவைப்படும் 120 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

(iii). அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளுக்கு **2011–2012**ஆம் கல்வியாண்டு முதல் **1590** முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் கூடுதல் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

**3.** மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணியிடங்களின் பள்ளி வாரியான ஒதுக்கீடு குறித்த ஆணை தனியாக வெளியிடப்படும்.

**4.** மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கான செலவினம் கீழே குறிப்பிட்டுள்ளவாறு கோரிக்கை எண்.**43–03**ன் கீழ் புதிதாக தொடங்கப்படும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

(i) 2202 பொதுக்கல்வி – **02** இடைநிலைக்கல்வி – **109** – அரசு இடைநிலைப்பள்ளிகள் – I திட்டத்தில் சேராதது – BC அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் கூடுதல் பணியிடங்களை ஏற்படுத்துதல் – **01** சம்பளங்கள்.
**(து.தொ.கு 2202 02 109 BC 0103)**

**5.** மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கான செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

(ii) 2202 பொதுக்கல்வி – **02** இடைநிலைக்கல்வி – **109** – அரசு இடைநிலைப்பள்ளிகள் – I திட்டத்தில் சேராதது – AA –அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களின் சம்பளங்கள்
**(து.தொ.கு 2202 02 109 AA 0000)**

(iii) 2202 பொதுக்கல்வி – **02** இடைநிலைக்கல்வி – **109** – அரசு இடைநிலைப்பள்ளிகள் – I திட்டத்தில் சேராதது – AB –நகராட்சி மற்றும் மாநகராட்சி இடைநிலை/ மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளங்கள்.
**(து.தொ.கு 2202 02 109 AB 0008)**

**6.** மேலே பத்தி **4**–ல் குறிப்பிடப்பட்டுள்ள புதிய கணக்குத் தலைப்பிற்கு பள்ளிக் கல்வி இயக்குநர், மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுபாட்டு அலுவலராக செயல்படுவார். சம்மந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்/ கருவூல கணக்கு அலுவலர் மேற்கண்ட புதிய கணக்குத் தலைப்பினை தங்கள் கணக்குகளில் துவக்கிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

7. மேலே பத்தி 4–ல் உள்ள கணக்கு தலைப்பில் முதற்கண் பற்று வைக்கப்படும் செலவினை அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்ட நிதியில் இருந்து மீள பெற்று கீழ்க்காணும் கணக்கு தலைப்பின்கீழ் வரவு வைக்கப்பட வேண்டும்:

"0202 கல்வி, போட்டி விளையாட்டுகள் கலையும் பண்பாடும் – 01 பொதுக்கல்வி – 102 இடைநிலைக் கல்வி – AL அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் ஏற்படும் செலவுகளை ஈடு செய்தல்''.
(து.தொ.கு. 0202 01 102 AL 0003)

8. மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள கூடுதல் பணியிடங்களின் சம்பளம் குறித்த செலவினம் ஒரு '**புது துணைப் பணியாக**' (New Instrument of Service) கருதப்பட்டு சட்டப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும். அவ்வாறு சட்டப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும் வரை இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவு நிதி முன்பணம் மூலம் மேற்கொள்ளப்படும். எதிர்பாராச் செலவு முன்பணத்திற்கான ஒப்பளிப்பு ஆணைகள் நிதி(வ.செ.தி.பொ–I)த் துறையில் வெளியிடப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலுடன் நிதியொதுக்கம் செய்யப்படும் வரை, மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணியிடங்களின் சம்பளம் குறித்த உடனடி செலவிற்கு தேவையான நிதியினை நிர்ணயித்து எதிர்பாராச் செலவு நிதி முன்பணம் பெற்றிட ஏதுவாக தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில், இவ்வரசாணையின் நகலுடன் நிதி(வ.செ.தி.பொ.I)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை 2011–12ம் ஆண்டிற்குரிய துணை மதிப்பீடுகளில் சேர்க்கும் பொருட்டு, உரிய துணை மதிப்பீட்டு குறிப்பினை நிதி (வரவு செலவு பொது–I)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறும் பள்ளிக்கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித் துறையின் இசைவினை அதன் அ.சா.எண். 67562/சிஎம்பிசி/2001, நாள்:22.12.2011–ல் பெற்று வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.1166(ஆயிரத்து நூற்று அறுபத்து ஆறு)

(ஆளுநரின் ஆணைப்படி)

தி.ஸ்ரீ.ஸ்ரீதர்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை – 6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை – 6.
கூடுதல் திட்ட இயக்குநர்,
அனைவருக்கும் இடைநிலைக் கல்வி இயக்ககம், சென்னை – 6.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
மாநிலக் கணக்காயர், சென்னை –18/35
நகல்
நிதித் (கல்வி-II) / (வரவு செலவு பொது I & II) துறை, சென்னை–9.
திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை–9
பள்ளிக் கல்வித் (வரவு–செலவு/எஸ்,) துறை, சென்னை–9.

முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
நிதி அமைச்சரின் அலுவலகம், சென்னை–9
பள்ளிக்கல்வித் துறை. அமைச்சரின்
அலுவலகம், சென்னை–9.
கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர்,
பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9.
பள்ளிக் கல்வித் துறையின் அனைத்துப் பிரிவுகள்,
சென்னை–9.